# தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை – 6

**முன்னிலை: முனைவர் ச. கண்ணப்பன்**

**<u>ந.க.எண்.006686/எம்/இ1/2017 நாள்: 28 .02.2017</u>**

பொருள்:– பள்ளிக் கல்வி – தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி திட்டம் 2017 – பள்ளிகளில் தடுப்பூசி முகாம் நடைபெறுதல் – அனைத்து பள்ளித்தலைமையாசிரியர்களுக்கும் அறிவுரை வழங்குதல் – சார்பு.

பார்வை:–

1. பொது சுகாதாரத் துறைச் செயலாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்:47454/P2/2016-4 நாள் 16.01.2017 மற்றும் 25.01.2017
2. அரசாணை எண்:19, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை நாள் 09.01.2017
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.6686/எம்/இ1/2017 நாள். 01.02,2017
4. பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்ககம், ந.க.எண். 100678/ இ3/2016 நாள்.27.2.2017

******

பார்வை மூன்றில் காணும் கடிதத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மூலமாக 15 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் பள்ளிகளில் தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி முகாம் (Measles Rubella Vaccination Campaign) நடைபெறுதல் சார்ந்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

அதன் தொடர்ச்சியாக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள சுகாதரத்துறையில் துணை இயக்குநர் ( சுகாதரம்) அவர்களுடன் ஒருங்கிணைந்து 100 சதவீதம் மாணவர்களுக்கு தடுப்பூசி போடப்பட உரிய திட்டம் தயாரிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தடுப்பூசி முகாம் நடக்கும் பள்ளிகளில் மருத்துவர் மற்றும் அவரை சார்ந்த குழுவினர் சுகாதாரத் துறை ஊர்தியினை பள்ளியின் முகப்பில் நிறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தடுப்பூசி முகாம் நடத்துவதற்கு முன் துணை இயக்குநர் ( சுகாதரம்) உதவியுடன் மாணவர்களின் பெற்றோர்களுக்கு கூட்டம் ஏற்பாடு செய்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்டத்தில் உள்ள முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்கள் ஒருங்கிணைந்து ஒரு குழுவாக செயல்பட்டு மழலையர் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் விடுபடாமல் தடுப்பூசி போடப்பட நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.. மேலும் அங்கன்வாடி பள்ளிகளில் பயிலும் மாணவர்களையும் தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தடுப்பூசி போடுவது தொடர்பாக துணை இயக்குநர் (சுகாதரம்) அவர்களுடன் ஒருங்கிணைந்து தங்கள் மாவட்டத்தில் உள்ள சிறந்த மருத்துவரைக் கொண்டு குறும் படம் தயாரித்து தங்கள் மாவட்டத்தில் விளம்பரம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதனை தங்கள் மாவட்ட வலைதளம், தொலைக்காட்சி கேபிள் மற்றும் வாட்ஸ் அப் மூலம் தடுப்பூசி போடுவதன் அவசியத்தினை பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.. இதனை தங்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் துணை இயக்குநர் (சுகாதரம்) அவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

துணை இயக்குநர் (சுகாதரம்) அவர்களுடன் ஒருங்கிணைந்து துண்டு பிரசுரங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது. 15 நாட்களுக்குள் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் துணை இயக்குநர் (சுகாதரம்) அவர்களுடன் ஒருங்கிணைந்து 100% மாணவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு முடிக்க தங்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்காண் அறிவுரைகளை பின்பற்றி, தடுப்பூசி முகாம் சிறப்பாக நடைபெற பள்ளித்தலைமையாசிரியர்களுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்கிடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பள்ளிக் கல்வி இயக்குநர்**

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்கள்

**நகல்**

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9 தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

2. அரசு முதன்மைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9 தகவலுக்காக பணிந்தனுப்பபடுகிறது.

3.இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்ககம், சென்னை–6 பணிந்து அனுப்பப்படுகிறது.

4.தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6 அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.

5.மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6 அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.